**5301**

| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# தமிழ் - முதல் தாள்

# Language – Part A – TAMIL – Paper I

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் IV-க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் எட்டனுக்கு மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 8 × 2 = 16

1. திரு. வி. க. அவர்கள் படைத்த நூல்களுள் நான்கினைக் கூறுக.

2. சினம் எவற்றைக் கொல்லும் ?

3. வலிமையில்லாதவரும் வெல்வர் - எப்பொழுது ?

4. போதிலார் திருவினாள் - விளக்குக.

5. யூதர்கள் சிலுவைமிசை எழுதியது யாது ?

6. கடலின் கவின் மிகு காட்சி யாது ?

7. நன்மாறன் பகைவர்க்கும், பாவலர்க்கும் எத்தகையோன் ?

8. பெண்பால் பிள்ளைத் தமிழுக்குரிய இறுதி மூன்று பருவங்களை எழுதுக.

9. பாரத பூமி எத்தகைய பூமி ?

10. கடல் புதல்வியாய் யாரைப் பெற்றுள்ளது ?

[ Turn over

II. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : $3 \times 5 = 15$

11. திரு. வி. க. வேண்டுவன யாவை ?

12. கவிஞர் தமிழை எவ்வாறு வாழ்த்துகிறார் ?

13. செல்வத்தை அழிக்கும் படைகள் யாவை ?

14. 'யாதைச் சாற்றுகேன்' - இத்தொடர் பொருளை விளக்கு ?

15. திருவேங்கடத்து இறைவனை நம்மாழ்வார் எங்ஙனம் போற்றியுள்ளார் ?

III. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக : $1 \times 7 = 7$

16. புகழுடையார் எய்தும் மேன்மையும் அது இல்லாதாரது தாழ்வினையும் விளக்கி வரைக.

17. மங்கல வாழ்த்துப் பாடலால் தெரியவரும் கோவலன், கண்ணகி பண்பு நலன்களை விளக்கி வரைக.

18. குறத்தி கூறும் குற்றால மலை வளத்தைத் தொகுத்து எழுதுக.

19. பாரதிதாசன் உலக ஒற்றுமை பற்றிக் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

IV. பின்வருவனவற்றை அடிபிறழாமல் எழுதுக : $2 + 2 + 3 + 3 = 10$

20. 'நிலவரை' எனத் தொடங்கும் குறளையும், 'துயர்வு' என முடியும் குறளையும் எழுதுக.

21. 'கொல்லாமை' எனத் தொடங்கும் மொழி வாழ்த்துப் பாடலையும் 'தன்னரிய' என்ற இரட்சணிய யாத்திரிகப் பாடலையும் எழுதுக.

V. கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக : 10 × 1 = 10

( வினா எண் 22 முதல் 27 வரை சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக )

22. வசை என்னும் சொல்லின் பொருள் .................... . ( பலி / பழி )

23. கலம்பக உறுப்புகள் .................... .

அ) ஆறு

ஆ) பன்னிரண்டு

இ) பதினெட்டு.

24. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாடியவர் .................... .

அ) பாரதிதாசன்

ஆ) பாரதியார்

இ) கவிமணி.

25. குறுந்தொகை என்னும் தொடரைப் பிரிக்கும் முறை

அ) குறும் + தொகை

ஆ) குறு + தொகை

இ) குறுமை + தொகை.

26. இரட்சணிய யாத்திரிகத்தில் உள்ள பருவங்கள்

அ) மூன்று

ஆ) நான்கு

இ) ஐந்து.

27. மையிருட்டுக் கை நீட்டும்

அ) மேற்குவானில்

ஆ) தொடுவானில்

இ) கீழ்த்திசையில்.

28. செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்

இல்லதனின் தீய பிற - சீர்பிரித்து எழுதுக.

29. உவமையைப் பொருளொடு பொருத்துக :

'நிலத்தறைந்தான் கை பிழையா தற்று'

30. கீழ்காணும் செய்யுளில் மோனையைச் சுட்டுக :

'கடக்கரும் அரக்கியர் காவல் சுற்றுளாள்

மடக்கொடி சீதையாம் மாத ரேகொலாம்'

31. பொருத்துக :

| | | |
|---|---|---|
| அ) உமறுப்புலவர் | — | திருப்பாமாலை |
| ஆ) கண்ணதாசன் | — | சீறாப்புராணம் |
| | — | இயேசு காவியம். |

VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 5 × 2 = 10

32. இந்தியாவின் தேவைகளென அப்துல்கலாம் குறிப்பிட்டு உள்ளவை யாவை ?

33. இரகுநாத சேதுபதியின் அன்பில் வளர்ந்த புலவர்கள் யாவர் ?

34. ஒவ்வொரு கூட்டத்திலும் வ. உ. சி. எடுத்துரைக்கும் குறள் யாது ?

35. பெரியார் என்னும் சொல் எதனை நினைவுக்குக் கொண்டு வருகிறது ?

36. பொருள்களின் மூன்று உருவ நிலைகள் யாவை ?

37. திருநெல்வேலிச் சீமையின் சிறப்பு யாது ?

38. செல்வர்கள் ஒளவையாரிடம் வேண்டியது என்ன ?

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 3 × 5 = 15

39. அப்துல்கலாம் நம் மக்களை எவ்வாறு மூவகைப்படுத்துகிறார் ?

40. எவற்றை மென்மேலும் படிக்க வேண்டுமென மு. வ. விரும்புகிறார் ?

41. சுதேசி நாவாய்ச் சங்கம் - குறிப்பெழுதுக.

42. நீர்ப்பொருளின் சுருங்கா இயல்பு - விளக்குக.

43. ஒளவையார் தம் வாய் யார்யாரைப் பாடியதாகக் கூறிப் பெருமைப்படுகிறார் ?

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் ( பதினைந்து வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 1 × 7 = 7

44. அமிர்த கவிராயரின் ஒரு துறைக்கோவை அரங்கேற்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்து எழுதுக.

45. தாய்மொழியிலேயே கல்வி பெறலாம் என்பதைத் திரு. வி. க. எவ்வாறு நிறுவுகிறார் ?

46. பெரியாரின் மதுவிலக்குத் தொண்டு பற்றி தொகுத்து எழுதுக.

47. மனையியலும், கல்வியும் ஒன்றே - விளக்குக.

[ Turn over

IX. கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக : 10 × 1 = 10

48. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

பொருளாதாரச் சாதனைகளுக்கு இட்டுச் செல்வது

அ) மனித ஆற்றல் வளம்

ஆ) கணிப்பொறி நிபுணத்துவம்

இ) இயற்கை வளம்.

49. கோடிட்ட இடத்தை நிரப்புக.

தொழிற் பயிற்சியும் .................... பட்டதே.

50. கீழ்க்காணும் தொடரில் காணப்பெறும் ஒருமைப் பன்மை பிழையை நீக்குக.

ஒலி, ஒளி என்ற சொற்களுக்கிடையில் ஒற்றுமை இருக்கின்றது.

51. கீழ்க்காணும் விடை அமையுமாறு ஏற்ற வினாத் தொடர் அமைக்க :

இல்வாழ்க்கை வளர்பிறை போல் வளர வேண்டும்.

52. கீழ்க்காணும் வாக்கியம் எவ்வகை வாக்கியம் :

என்னே அவருடைய தியாகம்

53. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழையை நீக்குக :

எட்டப்ப மன்னரின் அவையில் தலைமை தமிழ் புலவராய் கடிகை முத்துப்பிள்ளை என்ற பெரியார் இருந்தார்

54. கீழ்க்காணும் உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்று :

தேன்தமிழ், குமுதவாய்

55. வேற்றுமை உருபைச் சேர்த்து எழுதுக :

சேதுபதி மன்னர்கள் தமிழ் வளர்க்கும் பரம்பரை .................... சார்ந்தவர்கள். ( ஐ, ஆல், கு, இன் ).

56. கீழ்க்காணும் சொற்களுள் இரு பொருள் தரும் ஏதேனும் ஒரு சொல்லை எழுதி, அச்சொல் தரும் இருபொருளையும் தருக.

அ) பார்

ஆ) திங்கள்

இ) நகை

ஈ) மாலை.

57. கீழ்க்காணும் தொகைச் சொற்களுள் ஒன்றனை விரித்து எழுதுக :

முக்கனி, ஐந்திலக்கணம்.